ஆசிரியர்கள் சம்பளம்

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளுக்கிணங்க, சம்பள வீதங்கள் மாற்றியமைக்கப்பட்ட பிறகு, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரசினர் (B) உயர்நிலைப் பள்ளிகளில் பணியில் தங்களைக் காட்டிலும் இளநிலையில் உள்ளவர்களை விடக் குறைவாகச் சம்பளம் பெறும் தலைமை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர் உள்ளனர்?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இம்மாதிரி சில ஆசிரியர்கள் இருந்து, அவர்களுடைய கோரிக்கை பின்னால் ஏற்கப்பட்டதாவென்று அறிய விரும்புகிறேன். கேள்வி எழுப்பப்பட்டதற்குப் பின்னால், "செகண்ட் பே கமிஷன்" பரிந்துரைப்படி, இம்மாதிரிக் கொடுக்க வேண்டும்; ஜூனியர்களுக்கு இருக்கிற சம்பளத்தைக் காட்டிலும், சீனியர்களுக்குக் குறையக் கூடாதென்று இருந்தும், இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு, பல மாதங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இந்த வினா எழுப்பப்பட்டதற்குப் பிறகு அப்படிக் கொடுக்கப்பட்டதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய முழு விவரங்கள் என்னிடம் இல்லை. ஆகவே, இப்போது இந்தக் கேள்வியின்படி, அப்படிப்பட்ட நிலைமைகள் இல்லையென்று கூறப்பட்டிருக்கிறது. அதிலிருந்து அது கொடுக்கப்பட்டிருக்கலாமென்று யூகிக்கலாம். அப்படிக் கொடுக்காமலிருந்தால், அதுபற்றித் தனியாகப் பரிசீலிக்கலாம்.

State Industries Promotion Corporation of Tamil Nadu Limited (SIPCOT)

* 300 *Q.*—Thiru S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the State Industries Promotion Corporation of Tamil Nadu Limited (SIPCOT) have formulated any Consortium Aid Scheme ; and

(*b*) if so, the details thereof ?

[1973 மார்ச் 29

தமிழ்நாடு மாநிலத் தொழிலாக்கக் கழகம் (சிப்காட்)

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு மாநிலத் தொழிலாக்கக் கழகம் (சிப்காட்) அனைத்து நாட்டு வங்கிக் கூட்டிணைப்பு உதவித் திட்டம் (Consortium Aid) ஏதேனும் வகுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

பி.ப. 4-20 மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வணிக வங்கிகளின் உடனுழைப்புடன், தொழில் முனைவர்களுக்கு பெரும் அளவில் கடன் வசதிகளைச் செய்து தருவதே இணை நிதியுதவித் திட்டத்தின் (Consortium Aid) நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ், தொழில் பிரிவு ஒன்றுக்கு, உயர்ந்த அளவு அப்பிரிவின் நிலையான இருப்பின் 75 சதவீதத்திற்குத் தவணைக் கடன்களாக வழங்கப்படும். அதில் 50 சதவீதம், வணிக வங்கிகளிடமிருந்து சாதாரண முறையிலும் எஞ்சிய 25 சதவீதம் "சிப்காட்" (SIPCOT) துணை நிதியாகவும் வழங்கப்படும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே. தனியார் துறையில் தொழில்கள் தொடங்குவதற்காகத்தான் இந்தத் திட்டம் வழங்கப் பட்டிருக்கின்றது என்று அறிகின்றேன். இந்தத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்ட தொழில் ஏதாவது இருக்கின்றதா? அந்தத் தொழிலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உதவித்தொகைபற்றி அறிவிக்க முடியுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது வரை கொடுத்ததாகத் தகவல் இல்லை.

Assistance under the E.S.I. Scheme towards Medical Charges

*1. S.N. *Q.*—Thiru KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the State Government have taken any steps to enhance the quantum of assistance permitted by the E.S.I. Corporation to the employees who come under the E.S.I. Scheme towards the medical charges since the present allotment is too low; and

(*b*) if so, the benefits accrued therefrom ?